# திருத்தங்கல் நகராட்சி
## சாதாரண கூட்டம்

நிகழும் ஸ்ரீவிளம்பி வருடம் கார்திகை திங்கள் 13ம் நாள். **29–11–2019** ம் தேதி வெள்ளிகிழமை காலை **11.00** மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் 1வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு .எஸ். ஜெயந்தி**

திருத்தங்கல் நகராட்சி
நாள் .26 –11–2019

தனிஅலுவலர்
திருத்தங்கல் நகராட்சி

பொருள்–**391**

திருத்தங்கல் நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதித் திட்டம் 2019-20-ன் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பான விளம்பர அறிவிப்பு 28.11.2019-ம் தேதி மக்கள் முகம் நாளிதழில் வெளியிடப்பட்டமைக்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல் எண். 413 நாள். 28.11.2019 தொகை ரூ.21,000/- (ரூபாய் இருபத்தி ஒரு ஆயிரம் மட்டும்) மேற்காண் நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு:-</u>**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 2624/இ1/2019

பொருள்–**392**
திருத்தங்கல் நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதித் திட்டம் 2019-20-ன் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பான விளம்பர அறிவிப்பு 28.11.2019-ம் தேதி தமிழ் சுடர் நாளிதழில் வெளியிடப்பட்டமைக்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல் எண். A//ADVT//NOV 2019//161 நாள். 28.11.2019 தொகை ரூ.16,800/- (ரூபாய் பதினாறு ஆயிரத்தி என்னூறு மட்டும்) மேற்காண் நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**<u>அலுவலக்குறிப்பு:-</u>**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 2624/இ1/2019

பொருள்–**393**
திருத்தங்கல் நகராட்சி பொது நிதி 2019-2020 திட்டத்தின் கீழ் 09.11.2019-ம் தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1 | **<u>திருத்தங்கல் நகராட்சி</u>**<br>திருத்தங்கல் நகராட்சி நாடார் நந்தவனத் தெருவில் உள்ள 8.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு புதிய குளோரின் இயந்திரம் பொருத்தும் பணி | **10.00** | P.முருகன் | 0.10% கூடுதல் |
| | | | திரு.R.K. Enterprises | 0.05% குறைவு |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.R.K. Enterprises அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**
மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண் : 2267/இ1/2019)

பொருள்–394

திருத்தங்கல் நகராட்சி பொது நிதி 2019-2020 திட்டத்தின் கீழ் 09.11.2019-ம் தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1 | **திருத்தங்கல் நகராட்சி**<br>சிவகாசி - விருதுநகர் மெயின் ரோடு சீனிவாச பைன் ஆர்ட்ஸ் எதிரில் உள்ள குப்பை கிடங்கை சுற்றி செட் அமைக்கும் பணி | 7.00 | P.முருகன் | 0.05% குறைவு |
| | | | திரு.M.கண்ணன் | 0.08% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திரு.M.கண்ணன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**
மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண் : 2265/இ1/2019)

பொருள்–395

திருத்தங்கல் நகராட்சி தமிழ்நாடு அரசின் சிறப்பு நிதி திட்டம் 2019-2020-ன் கீழ் இந்நகர் பகுதிகளில் தார்ச்சாலைகள், சிமெண்ட் பேவர்கல் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1778.79 இலட்சம் (ரூபாய் ஆயிரத்தி எழுநூற்றி எழுபத்தி எட்டு இலட்சத்தி எழுபத்தி ஒன்பது ஆயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்து மேற்படி மதிப்பீட்டுத் தொகையை அரசு மானியமாக பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கீழ்கண்ட விவரப்படி திட்ட கருத்துரு தயார் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|
| 1 | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண். 03 பெரியார் காலனியில் தார்ச்சாலை மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி | 168.75 |
| 2 | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண். 05 முருகன் காலனி மற்றும் தேவராஜ் காலனியில் தார்ச்சாலை மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி | 324.75 |
| 3 | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண். 07 கே.கே. நகர் பகுதியில் சிமெண்ட் பேவர்கல் சாலைகளுடன் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி | 129.27 |
| 4 | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண். 08 சத்யா நகர் மற்றும் கண்ணகி காலனியில் தார்ச்சாலை மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி | 337.50 |
| 5 | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண். 21 ஸ்டாண்டர்டு காலனி (மங்கம்மா சாலையில்) தார்ச்சாலை மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி | 108.75 |
| 6 | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண். 01 அண்ணா காலனியில் தார்ச்சாலை, பேவர்கல் சாலை மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி | 256.95 |
| 7 | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண். 02 சிறுவர் பூங்கா பகுதியில் சிமெண்ட் பேவர்கல் சாலைகளுடன் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி | 94.80 |

| | | |
|---|---|---|
| | | |
| 8 | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண். 04 முத்துமாரியம்மன் காலனியில் தார்ச்சாலை, பேவர்கல் சாலை மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி | 179.82 |
| 9 | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண். 10 பண்டியன் நகர் 4-வது தெரு மற்றும் 5-வது தெருவில் தார்ச்சாலை, பேவர்கல் சாலை மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி | 178.20 |
| | **மொத்தம்** | **1778.79** |

**<u>அலுவலக்குறிப்பு:-</u>**
அனுமதிக்கப்பட்டது.
ந.க.எண்.2685/2019/இ1

பொருள்–**396**

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண்.01 அண்ணா காலனி, திருப்பதி நகர், வார்டு எண். 03 ஆலமரத்துப்பட்டி ரோடு அங்கன்வாடி மையம், வார்டு எண். 07 கே.கே. நகர் பிள்ளையார் கோவில், வார்டு எண். 18 சரஸ்வதி நகர் கழிப்பறை, சரஸ்வதி நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, பெரியகுளம் கண்மாய் பகுதியில் 5 எண்ணம் ஆழ்துளை கிணறுகளுக்குரிய சர்வீஸ், செய்குளம் கருப்பசாமி கோவில் அருகில் 2 எண்ணம் சர்வீஸ் முதலானவற்றில் புதிய மின்வயர்கள் மாற்றி அமைப்பதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு:-</u>**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். /இ1/2019

பொருள்–**397**

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 04 முத்துமாரியம்மன் காலனி பகுதியில் உள்ள குடிநீர் விநியோகக் குழாய்கள் தற்சமயம் பழுதடைந்து குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே பொதுமக்களின் குடிநீர் அவசர அவசியம் கருதி சீரான குடிநீர் குழாய்கள் பதித்து குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.4,50,000/- (ரூபாய் நான்கு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு:-</u>**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். /இ1/2019

பொருள்–**398**

திருத்தங்கல் நகராட்சி பகுதியில் உள்ள அரசு கட்டிடங்கள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் முதலானவற்றில் மழைநீர் சேகரிப்பு வசதிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு:-</u>**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். /இ1/2019

பொருள்–**399**

திருத்தங்கல் நகராட்சி சிவகாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதித்திட்டம் 2019-20-ன் படி கீழ்கண்ட விவரப்படியான பணிகள் மேற்கொள்ள சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கை வரப்பட்டுள்ளது. அதன்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | சட்டமன்ற உறுப்பினர் ஒதுக்கீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | நகராட்சி பொது நிதி (ரூ. இலட்சத்தில்) | மொத்த மதிப்பீடு ( ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி** ஸ்டாண்டர்டு காலனியில் புதிய அங்கன்வாடி மையம் கட்டுதல் | 5.00 | 5.00 | 10.00 |
| 2. | **திருத்தங்கல் நகராட்சி** திருத்தங்கல் நகராட்சி பொது மயானத்திற்கு அடிப்படை வசதிகள் செய்தல் (சுற்றுச்சுவர், மயான கொட்டகை, காத்திருப்போர் கூடம்) | 20.00 | 20.00 | 40.00 |
| 3. | **திருத்தங்கல் நகராட்சி** திருத்தங்கல் நகராட்சி வார்டு எண்.18-ல் கலையரங்கம் கட்டுதல் | 10.00 | 10.00 | 20.00 |
| 4. | **திருத்தங்கல் நகராட்சி** வார்டு எண்.9 செங்கமலநாச்சியார்புரம் சாலை காவல்நிலையம் அருகில் சமுதாய கூடத்திற்கு முதல் மாடி கட்டுதல் | 15.00 | 15.00 | 30.00 |
| 5. | **திருத்தங்கல் நகராட்சி** திருத்தங்கல் அரசு மருத்துவமனையில் பார்வையாளர் ஓய்வு அறை மற்றும் சைக்கிள் ஸ்டாண்டு கட்டுதல் | 7.50 | 7.50 | 15.00 |
| | மொத்தம் | 57.50 | 57.50 | 115.00 |

மேற்படி 5 பணிகளுக்கு சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு தொகை ரூ.57.50 இலட்சம் ஆகும். மேற்படி பணிகளுக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.115.00 இலட்சம் ஆகும். மேற்படி பணிகளுக்கு சட்டமன்ற தொகுதி ஒதுக்கீடு தொகையை விட மதிப்பீட்டுத் தொகை கூடுதலாக உள்ளதால், கூடுதலாக உள்ள தொகை ரூ.57.50 இலட்சத்தினை நகராட்சி பொது நிதி மூலம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு—</u>
மன்றம் முன் அனுமதி வழங்க
(ந.க.எண் : 2624/இ1/2019)

பொருள்—400

திருத்தங்கல் நகராட்சி பகுதியில் உள்ள GLR டேங்குகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் முதலானவற்றில் வர்ணம் பூசி பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக்குறிப்பு:-**</u>
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். /இ1/201

பொருள்—401

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 19 ஆசாரிமார் நந்தவனத் தெருவில் உள்ள பெண்கள் சுகாதார வளாகத்தின் சுற்றுச்சுவரின் உயரம் குறைவாக உள்ள காரணத்தினால் மேற்காண் சுகாதார வளாகத்தினைப் பயன்படுத்தும் பெண்களுக்கு பாதுகாப்பு குறைபாடு ஏற்படுகின்றது. எனவே பொதுமக்களின் அவசியம் மற்றும் பெண்களின் பாதுகாப்பு அவசியம் கருதி மேற்காண் சுகாதார வளாகத்தினை சுற்றி உள்ள சுற்றுச் சுவரினை உயர்த்திக் கட்ட ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக்குறிப்பு:-**</u>
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 2624/இ1/2019
பொருள்—402

திருத்தங்கல் நகராட்சிப் பகுதியில் உள்ள வார்டு எண்.01 அண்ணா காலனி, வார்டு எண்.05 முருகன் காலனி, வார்டு எண்.06 கக்கன் காலனி, திருவள்ளுவர் காலனி, வார்டு எண். 13 கே.கே. நகர், முனீஸ்வரன் காலனி மற்றும் 32 வீட்டுக்காலனி, வார்டு எண்.18 சுக்கிரவார்பட்டி மெயின் ரோடு குறுக்குத் தெருக்கள் மற்றும் பெரியகுளம் கண்மாய் மெயின் ரோடு ஆகிய

பகுதிகளில் தாமிரபரணி புதிய கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்படி பணிகளின் போது மேற்காண் பகுதிகளில் ஏற்கனவே இந்நகராட்சியின் மூலம் பதிக்கப்பட்ட பல்வேறு குடிநீர் குழாய்கள் முற்றிலும் சேதமடைந்துள்ளது. இதனால் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதில் பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றது. எனவே பொதுமக்களுக்கு சீரான அளவில் குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு மேற்படி பகுதிகளில் பழுதான குடிநீர் குழாய்களுக்கு பதிலாக புதிய குடிநீர் குழாய்கள் பதித்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 2453/இ1/2019

பொருள்–403

திருத்தங்கல் நகராட்சி நகர்புற சாலைகள் மேம்பாட்டு நிதித் திட்டம் (Turip) 2019-2020-ன் கீழ் சாலை பணிகள் மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாநில ஒப்பந்தப்புள்ளி மலரில் Accord Advertising Agency என்ற விளம்பர நிறுவனத்தின் மூலம் வெளியிடப்பட்டமைக்கான பட்டியல் எண். AAA/0401/19-20 நாள்.28.10.2019 தொகை ரூ.52,567- (ஐம்பத்தி இரண்டு ஆயிரத்தி ஐந்நூற்றி அறுபத்தி ஏழு ரூபாய் மட்டும்) மேற்காண் விளம்பர நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 1995/2019/இ1

பொருள்–404

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண்.14 கூடலிங்கம் சந்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது என அந்தப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். மேற்படி தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியானது மிகவும் மோசமாக இடிந்து விழும் நிலையில் உள்ளது தெரியவருகிறது. மேலும் மேற்காண் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியினை இடித்து அப்புறப்படுத்தி பொதுமக்கள் பயமின்றி நடமாட வழிவகை செய்யுமாறு திருத்தங்கல நகர காவல் ஆய்வாளர் அவர்கள் கேட்டுக்கொண்டதனாலும் மேற்படி தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியை பொதுமக்கள் நலன் கருதி உடனடியாக இடித்து அப்புறப்படுத்த ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.50,000/- (ரூபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 2795/இ1/2019

பொருள்–405

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண்.14 சின்னையன் சந்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது என அந்தப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். மேற்படி தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியானது மிகவும் மோசமாக இடிந்து விழும் நிலையில் உள்ளது தெரியவருகிறது. மேலும் மேற்காண் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியினை இடித்து அப்புறப்படுத்தி பொதுமக்கள் பயமின்றி நடமாட வழிவகை செய்யுமாறு திருத்தங்கல நகர காவல் ஆய்வாளர் அவர்கள் கேட்டுக்கொண்டதனாலும் மேற்படி தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியை பொதுமக்கள் நலன் கருதி உடனடியாக இடித்து அப்புறப்படுத்த ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.50,000/- (ரூபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 2795/இ1/2019
பொருள்–406

திருத்தங்கல் நகராட்சி அலுவலகத்தில் உள்ள பொறியியற் பிரிவில் உள்ள கணினியில் பல்வேறு திட்டப் பணிகளுக்கான ஆவணங்கள், மதிப்பீடுகள் மற்றும் கோப்புகள் முதலானவைகள் பதிவேற்றம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் நகராட்சி அலுவலகத்தில் அடிக்கடி ஏற்படும் மின் தடையின் காரணமாக பொறியியற் பரிவில் உள்ள கணினியும் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றது. எனவே ஆவணங்கள், மதிப்பீடுகள்கள் மற்றும் கோப்புகள் முதலானவைகளின் பாதுகாப்பு அவசியம் கருதி பொறியியற் பரிவிற்கு என தனியாக ஒரு UPS கருவி 1.5 KW அளவில் வாங்கி பொருத்திக் கொள்ள ஆகும் உத்தேச மதிப்புத் தொகை **ரூ.70,000/- (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்)** மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**
அனுமதிக்கப்பட்டது.
ந.க.எண். 2764/2020/இ1

பொருள்–407

திருத்தங்கல் நகராட்சி அலுவலகத்தில் முறு அளவிலான மின்மாற்றிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி மின்மாற்றிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்புத் தொகை **ரூ.15,000/- (ரூபாய் பதினைந்து ஆயிரம் மட்டும்)** மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு**
அனுமதிக்கப்பட்டது.
ந.க.எண். 2764/2020/இ1

பொருள்–408

இந்நகராட்சி பகுதியில் தற்சமயம் வடகிழக்கு பருவமழை பெய்து வருவதால் தண்ணீர் தேங்கி கொசு உற்பத்தியாகி காய்சலால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகமாகி வருவதால் கொசு ஒழிப்பு பணிகளை துரிதப்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விருதுநகர், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விருதுநகர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி துணை இயக்குனர் சுகாதார பணிகள் சிவகாசி அவர்கள் தொடர்ந்து அறிவுறுத்தி வருகின்றனர். எனவே கொசு ஒழிப்பு பணிக்கு தேவையான புகைபரப்பும் இயந்திரம் பெரியது ( 5லிட்டர் கொள்ளளவு) 2 எண்ணம், புகைபரப்பும் இயந்திரம் சிறியது (2லிட்டர் கொள்ளளவு) 2 எண்ணம், புகைபரப்பும் இயந்திரம் சிறியது (2லிட்டர் கொள்ளளவு) 5 எண்ணம், சிலிண்டர் 100 எண்ணம் வாங்க ஆகும் உத்தேசசெலவினம்தொகை ரூ. 4,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2633/2019/எச்1)

பொருள்–409

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றி திரியும் பன்றிகளால் பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுவதாக பொதுமக்களிடமிருந்தும் புகார் வந்த வண்ணம் உள்ளன. எனவே பொது மக்களை பன்றிகளால் ஏற்படும் நோய்களிடமிருந்து பாதுகாக்க சுகாதார சீர்கேடு ஏற்படாத வண்ணம் தடுக்கவும் ரோட்டில் சுற்றி திரியும் பன்றிகளை அப்புறப்படுத்த ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ. 50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். /2019/எச்1

பொருள்–410
இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN67AP0835 டிப்பர் லாரிக்கு தகுதிச் சான்றிதழ் 05.12.2019 உடன் முடிவடைய உள்ளதால் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொண்டு தகுதி சான்றிதழ் பெற ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.76000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது
**அலுவலக குறிப்பு**
பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்

பொருள்–411
இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN67AK5848 நாய்கள் பயண வாகனத்திற்கு தகுதி சான்றிதழ் 06.02.2020 உடன் முடிவடைய உள்ளதால் வருடாந்திரப் பணி மேற்கொண்டு தகுதி சான்றிதழ் பெற ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.40000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு**
பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 2739/2019/எச்1

பொருள்–412
இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் வாறுகால் சுத்தம் செய்து எடுத்து வைக்கும் கழிவுகளை அகற்றும் பணிக்கு தேவையான தள்ளுவண்டி பழுதடைந்து இயக்க முடியாத நிலை உள்ளதால் பொது சுகாதாரப்பணி பாதிப்படைகிறது. எனவே வாறுகால் மண் அகற்றும் பணிக்கு தேவையான தள்ளுவண்டி பிரிவுக்கு மூன்று வீதம் 9 எண்ணம் தள்ளுவண்டி

ஏதேனும் ஒரு கூட்டுறவு நிறுவனம் மூலம் வாங்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.310000/-- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் /2013/சி1

பொருள்–413

திருத்தங்கல் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் சொத்துவரி மற்றும் வணிக வளாகங்கள் (G.o.(ms)No.150) ன் படி 01.04.2018 முதல் வரி உயர்வு செய்யப்பட்டன. அதன்படி குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% எனவும் வணிகவளாகங்களுக்கு 100% எனவும் வரி உயர்வு செய்யப்பட்டன. அவைகளை 19.11.2019 முதல் உயர்த்தப்பட்ட வரிகளை குறைப்பதற்கான உத்தரவு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் ஆணைப்படி பிறப்பிக்கப்பட்டன. (G.o.(ms)No.150) மேலும் 2017–2018ம் ஆண்டு செலுத்தப்பட்ட தொகையிலே செலுத்தலாம் என வரி உயர்வு குறைக்கப்பட்டன. மேற்கண்ட உத்தரவினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 2791/2019/அ1

பொருள்–414

திருத்தங்கல் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் 2017–2018ம் ம் நிதி ஆண்டு முதல் மொத்தம் 10 கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டன. மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆணை எண். 7254/14/ஆர், இதில் mount litera கல்வி நிறுவனம் சொத்துவரியை நடப்பு ஆண்டு 2019–2020 இரண்டாம் அரையாண்டு வரை நிலுவையின்றி செலுத்தி விட்டன. மீதம் உள்ள கீழ் கண்ட 9 கல்வி நிறுவனங்கள்

1. கலைமகள் கல்வி நிறுவனம்
2. குளோரி மெட்ரிக்
3. கே. எம்.கே.ஏ மெட்ரிகுலேசன் பள்ளி
4. கலைமகள் மழலையர் பள்ளி
5. கலைமகள் மேல்நிலைப்பள்ளி
6. கலைமகள் தொடக்கப்பள்ளி
7. எஸ்.என்.புரம் மேல் நிலைப்பள்ளி
8. முத்துமாரி மெட்ரிக்குலேசன் பள்ளி
9. லயன்ஸ் மெட்ரிகுலேசன் பள்ளி

சொத்துவரி நிர்ணயம் செய்தது தொடர்பாக வழக்கு தொடர்ந்துள்ளன. இது தொடர்பான வழக்கு மதுரை உயர்நீதிமன்றத்தில் நடைப்பெற்று வருகின்றன. குறிப்பாக கலைமகள் கல்வி நிறுவனம் தான் வழக்கு தொட;;ர்ந்து இதுநாள் வரை நடைப்பெற்று வருகின்றன. எனவே மேற்கண்ட கல்வி நிறுவனங்களை litigation ஆக மாற்றுவதற்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 834/2018/அ1

பொருள்–415

இந்நகராட்சி 21 வார்டுகளை உள்ளடக்கிய முதல் நிலை நகராட்சி ஆகும். மொத்த பரப்பளவு 13.00 ச.கி.மீ கொண்டது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 55362 ஆகும் தற்போது வரி விதிப்பு கட்டிடங்கள் 22089 (வரிவிதிப்புகள்)மக்கட் தொகை 70000க்கு மேல் உள்ளன. நகராட்திற்கு தினசரி சராசரியாக 5000க்கு மேற்பட்டோர் வந்து செல்கின்றனர். (Floating population) இந்நகராட்சிப்பகுதியில் 18 பள்ளிகள் 12 அங்கன்வாடி மையங்களில் 14000க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். மேலும் வளர்ந்து வரும் நகராட்சியாகவும் உள்ளது.

தற்சமயம் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி, மாவட்ட ஆட்சித் தலைவர் விருதுநகர் துணை இயக்குநர் சிவகாசி அவர்கள் காய்ச்சல் கட்டுப்படுத்த அறிவுறுத்தி வருகின்றனர். நிலவேம்பு குடிநீர் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு தொடர்ந்து மூன்று நாட்களுக்கும் பொது மக்களுக்கும் வழங்க வேண்டியுள்ளது. அதற்கு தேவையான நிலவேம்பு குடிநீர் பொடி இருப்பு இல்லை என்பதால் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவியர்களை டெங்கு காய்ச்சலிலிருந்து பாதுகாக்க நோிய் எதிர்ப்பு சக்தி தரக் கூடிய நில வேம்பு குடிநீர் பொடி 400 கிலோ வாங்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ. 9,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—
பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 2758/2019/எச்1

பொருள்—416
இந்நகராட்சி 21 வார்டுகளை கொண்ட 13.00 ச.கீ.மீ சுற்றளவு கொண்ட முதல் நிலை நகராட்சி ஆகும். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 55362 ஆகும் தற்சமயம் 70000க்கு மேற்பட்ட மக்கட் தொகையும் 22089 வரி விதிப்பு கட்டிடங்கள் நகருக்கு தினசரி 5000க்கு மேற்பட்ட பொதுமக்கள் வந்து செல்கின்றனர். (Floating population) 128 திவ்ய தேசங்களில் ஒன்றான அருள்மிகு திருநின்ற நாராயண பெருமாள் திருகோவில் உள்ள வளர்ந்து வரும் நகராட்சியாகவும் உள்ளது. மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் குடியிருப்பு நகராட்சி பகுதியில் உள்ளதால் அமைச்சர் பெருமக்கள் அரசியல் தலைவர்களை அரசு அதிகாரிகள் தினமும் வந்து செல்லும் நகராட்சியாகவும் உள்ளது.

இந்நகராட்சி பகுதியில் 155 தெருக்கள் 18 மேல்நிலை பள்ளிகள் 12 அங்கள்வாடி மையங்கள் உள்ளன. மற்றும் 600க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் உள்ளன.

மேற்படி நகரின் முக்கிய இடமான பேருந்து நிலையம் பஸ் நிறுத்தம் , பொதுமக்கள் கூடும் முக்கியமான இடங்கள் அனைத்து தெருக்கள், நகராட்சி அலுவலகம் மற்றும் பல இடக்கிளில் ஈ மற்றும் ஈனால் பரவும் நோய்களிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கவும் தெருக்கள் மற்றும் அலுவலகத்தை சுத்தமாக பராமரிக்கவும் தேவையான லெமன் கிராஸ் ஆயில் 250 கிலே வாங்க ஆகும் உத்தேச லெவினம் ரூ. 9,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு—
பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 2613/2019/எச்1

பொருள்—417
திருத்தங்கல் நகராட்சி எல்லைக்குற்பட்ட கீழத்திருத்தங்கல் கிராமம் — அயன் புஞ்சை சர்வே எண் 293/1க்கு வடபுறம் கீழமேலாக 14.8 மீட்டர் அகலத்தில் சுமார் 1 கி.மீட்டர் நீளத்திற்கு செல்லும் பொது பாதையை அதாவது புல எண்கள் 291/2, 2A,2B,2C,2D,284,285,286,297,277 மற்றும் 298 ஆகிய எண்கள் வழியாக செல்லும் பொதுப்பாதையை நன்கொடை பத்திரத்தின் :முலம் (1) ஆவண எண்1/2017நாள்.2/1/2017 திரு. சு.கு. சிவநேசபாண்டியன் என்பவரும் (2) ஆவணஎண் 2/2017 , நாள்.01/10/2017ம் தேதியில் திரு. M. அருண் என்பவரும் ஆகிய இருவரும் எழுதி கொடுத்த ஆவணங்களின்படி சிவகாசி முதல் விருதுநகர் செல்லும் மெயின் ரோட்டிலிருந்து கீழமேலாக செல்லும் பாதையை வடமலாபுரம் பஞ்சாயத்திற்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது சிவகாசி வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் ந.க. பி3/1856/2019 நாள். 04/10/2019ம் தேதிய கடிதத்தில் வடமலாபுரம் பஞ்சாயத்திற்கு மேதகு ஆளுநர் பெயரில் எழுதி கொடுத்த பொதுப்பாதையை தமிழ்நாடு அரசிதழ் 1995ம் ஆண்டு வெளியிடப்பட்டதன் அடிப்படையில் வடமலாபுரம் ஊராட்சிக்கு இல்லை எனவும் மேற்கண்ட சர்வே எண்கள் திருத்தங்கல் நகராட்சி எல்லைக்கு உட்பட்டதாக தெரிய வருவதால் மேற்கண்ட பொதுப்பாதையை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் ந.க.அ1/3462/2019 நாள் 26/09/2019ம் தேதிய கடிதத்தில் கீழத்திருத்தங்கல் கிராமம் புலஎண்கள் 277, 284,285,286,291 மற்றும் 298 ஆகிய புல எண்கள் வழியாக செல்லும் சாலையானது சிவகாசி முதல் விருதுநகர் செல்லும் மெயின்ரோட்டிலிருந்து கீழமேலாக 14.8 மீட்டர் அகலத்திற்கு சுமார் 1.கி.மீ நீளம் வரை செல்கிறது. மேற்படிசாலையனது கல்மண் சாலையாக அமைந்துள்ளது. மேற்கண்ட புல எண்கள் வழியாக செல்லும் சாலை திருத்தங்கல் நகராட்சி எல்லைக்குள் தான் அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகிய இரண்டு கடிதங்களையும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

திருத்தங்கல் நகராட்சி கீழத்திருத்தங்கல் கிராமம் புல எண்கள் 277,284,285,286,291,297 மற்றும் 298 ஆகிய எண்கள் வழியாக சிவகாசி முதல் விருதுநகர் செல்லும் மெயின் ரோட்டிலிருந்து 14.8 மீட்டர் அகலத்திற்கு சுமார் 1. கி.மீட்டர் நீளத்திற்கு செல்லும் கல்மண் சாலையை நகராட்சிக்கு ந.க.பி3/1856/2019 நாள். 04/10/2019ம் தேதியை வட்டார வளர்ச்சி அலுவலர் (இ.ஊ)அவர்களின் மூலம் ஒப்படைப்பு செய்துள்ளதை மன்றம் ஏற்றுக் கொள்ள மன்றம் முடிவு செய்யலாம்.

அணையாளர்/தனிஅலுவலர்

திருத்தங்கல் நகராட்சி